# தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

பதிவு எண்.124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)
144, அண்ணா சாலை, சென்னை—600 002.

---

**தலைமையகம்: சென்னை.** **தேதி : 22.06.2015**

**சுற்றறிக்கை—1**

அன்பு பொறியாளர்களே, வணக்கம்.

**49வது மாநில பொதுக்குழு கூட்ட நிகழ்வுகள்:**

வணக்கம். 49வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் ஜுன் 13,14 தேதிகளில் வேலூரில் சிறப்பாக நடைபெற்றது. 43 கிளைகளிலிருந்தும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

முதல்நாள் நிகழ்ச்சியில் கடந்த ஆண்டின் செயல்பாடுகள் குறித்த அறிக்கைகளை மாநிலத்தலைவர், பொதுச் செயலாளர், பொதுப் பொருளாளர், வெளியீட்டுச் செயலாளர், நலநிதிச் செயலாளர் மற்றும் மண்டலச் செயலாளர்கள் அளித்தனர். அறிக்கைகள் மீது விவாதங்கள் நடைபெற்று, உறுப்பினர்கள் கருத்துக்களுக்கு பொதுச் செயலாளர் மற்றும் பொதுப் பொருளாளர் பதிலளித்த பின்னர், அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கடந்த ஆண்டின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சங்கத்தின் சார்பில் சரித்திரத்தில் இடம்பெற்ற நேரடி நடவடிக்கைகளான 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட 25.02.2015 நுழைவாயிற் கூட்டங்களும், 17.03.2015 அன்று 4000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாநிலம் தழுவிய — சென்னை "கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டமும்" அதனைத்தொடர்ந்து வாரியம் நமது கோரிக்கைகளை செயல்படுத்திட எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்தும் மிக விரிவாக விவாதிக்கப்பட்டது. கோரிக்கைகள் ஏற்றுக்கொண்டபடி காலக்கெடுவுக்குள் செயல்படுத்தவில்லையெனில் மாநில பொதுக்குழு முடிவின்படி தொடர் உண்ணாவிரதம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திட மையப் பொறுப்பாளர்களுக்கு பொதுக்குழுவில் அதிகாரம் அளிக்கப்பட்டது.

காமதேனு நலநிதி திட்டத்தை சிறப்பாக உறுப்பினர்களிடையே கொண்டு சென்று திட்டம்-Vல் 3000 உறுப்பினர்களை இணைத்து நலநிதி பயன் தொகை ரூ.2,00,000/—லிருந்து ரூ.3,00,000/— என உயர்த்திட சிறப்பாக பணியாற்றிய கிளைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

- முதல் பரிசு — விழுப்புரம் கிளை
- இரண்டாம் பரிசு — வேலூர் கிளை
- மூன்றாம் பரிசு — தஞ்சை மற்றும் முகவைக்கிளை

Mission- KBF-Vல் சிறப்பாக பணியாற்றி உறுப்பினர்களை சேர்த்த சென்னை / மேற்கு, காஞ்சிபுரம், கோவை, MTPS, மதுரை, TTPS, நாகை, கிருஷ்ணகிரி, மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய கிளைகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

<u>சங்கத்தின் சார்பில் வழங்கப்படும் கல்வி ஊக்குவிப்பு பரிசு (2013–14)</u>:

+ 2 மாணவ மாணவிகளுக்கு மேட்டூர் அனல் மின்நிலைய கிளையின் சார்பாக வழங்கப்படும் பொர்.P.E.சேதுபதி நினைவு கல்வி ஊக்குவிப்பு பரிசும். 10ம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு இராமநாதபுரம் கிளையின் சார்பாக வழங்கப்படும் பொர்.J.செல்வராஜ் நினைவு கல்வி ஊக்குவிப்பு பரிசுக்குரிய சான்றிதழ் மற்றும் காசோலைகள் கிளைச் செயலாளர்கள் மூலமாக வழங்கப்பட்டது.

2015–16ம் ஆண்டுக்கான புதிய பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர் (பொறுப்பாளர்கள் விவரம் தனியாக).

இரண்டாம் நாள் நிகழ்வுகளில், சங்கத்தின் இந்த ஆண்டிற்கான செயல்பாடுகளுக்கான திட்டங்கள் குறித்து விவாதித்து தீர்மானங்கள் இயற்றப்பட்டன. கிளைகளின் சார்பில் உறுப்பினர்களின் குறைகள், அலுவலக பணி தொடர்பான பிரச்சனைகள், தொடர்ந்துவரும் பிரிவுப் பொறியாளர் பிரச்சனைகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் இயற்றப்பட்டன. மேலும் அமைப்பு ரீதியான செயல்பாடுகள் குறித்த தீர்மானங்களும் இயற்றப்பட்டன.

<u>முக்கிய தீர்மானங்கள்</u>

- உதவி செயற் பொறியாளர் / சார்பு வழங்குவதில் உதவிப் பொறியாளர் / பொதுவியலுக்கு கடைபிடிக்கப்பட்ட முறையே கடைபிடிக்க வேண்டும். இளநிலைப் பொறியாளர், உதவிப் பொறியாளர் இடையே பாகுபாட்டினை ஏற்படுத்தும் வகையில், திணிக்கப்படும் **நிரந்தர AEE பதவிகளுக்கான 3:1 விகிதாச்சாரம் AEE/NI-க்கு பொருந்தாது என்பதை வாரியத்தின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருவதுடன், கடந்த காலத்தை போன்றே பாகுபாடற்ற முறையில் உதவி செயற் பொறியாளர் / சார்பு வழங்கிட வாரியத்தையும், அரசையும் இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.**

- வாரியத்தலைவர் ஏற்றுக்கொண்டு உடன் வழங்கிடுவதாக உறுதி அளித்த பதவி உயர்வுகள் – இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை – AAG அவர்கள் கடிதம் கிடைத்த ஒரு மாதத்திற்கு பின்னும் நடவடிக்கை மேற்கொள்ளாமல், இடைத்தேர்தல் வரை காலம் கடத்தி தாமதம் ஏற்படுத்திய பணியமைப்பு நிர்வாகத்தின் பாரபட்சமான அணுகுமுறையை அரசின், வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு சென்று, நீண்டகாலமாக நிலுவையிலுள்ள இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை, இளநிலைப் பொறியாளர் முதல் நிலை பதவி உயர்வுகளை மேலும் தாமதமின்றி விரைவில் வழங்கிட இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

- பல நிலைகளில் வாரியம் ஏற்றுக்கொண்ட கோரிக்கைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அமல்படுத்திட வாரியத்தை இப்பொதுக்குழு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது. பணியமைப்பு நிர்வாகத்தினால் மேலும் கோரிக்கைகள் அமல்படுத்தாமல் தாமதப்படுத்தப்படுமேயானால் பொதுக்குழு முடிவின்படி தொடர் உண்ணாவிரதத்தை தொடர்ந்திட மையப் பொறுப்பாளர்களுக்கு இப்பொதுக்குழு முழு அங்கீகாரத்தையும் ஏகமனதாக அளிக்கின்றது.

- இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை பதவி உயர்வுகளைத்தொடர்ந்து உருவாகும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளின் காலியிடங்களை 1100 தொழில்நுட்ப உதவியாளர் நேரடி நியமனம் மூலம் நிரப்பி பொதுமக்களுக்கு தடையின்றி மின்விநியோகம்

வழங்கிடச்செய்யுமாறு அரசையும், வாரியத்தையும் இப்பொதுக்குழு வேண்டி கேட்டுக்கொள்கிறது.

- காமதேனு நலநிதி திட்டம் – Mission KBF-Vல் விரைந்து 3000 உறுப்பினர்களை இணைத்ததன் பயனாக நலநிதி திட்டம்–Vன் பணப்பயனை ரூ.2,00,000/–லிருந்து ரூ.3,00,000/– என உயர்த்தி வழங்கிட இப்பொதுக்குழு அனுமதி அளிக்கிறது.

- காமதேனு நலநிதி திட்டம்-III, மற்றும் IV (Old)-ல் உள்ளவர்கள் KBF-V திட்டத்தில் இணைந்திட பலமுறை வாய்ப்புகள் அளிக்கப்பட்டு பலா் திட்டம்–Vல் இணைந்துள்ளனர். மீதமுள்ளவர்களும் திட்டம்–Vல் இணைந்திட ஏதுவாக KBF-III & IV (Old) மேலும் 3 மாதங்களுக்கு (திட்டம்-Vல் இணைவதற்காக) நீட்டிக்கப்படுகிறது. மூன்று மாதங்களுக்கு பின் (15.09.2015க்கு பின்) இத்திட்டங்கள் KBF-III & IV (Old) நடைமுறையில் இருக்காது என்றும் தீர்மானிக்கப்படுகிறது. இதற்கான அறிவிப்பு மின் அலையில் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு வெளியிடவும் தீர்மானிக்கப்படுகிறது.

- தொடர்ந்து உயர்ந்துவரும் மின்அலை அச்சிடுதல், தபால் அஞ்சல் செலவினங்களால் ஒரு மாத இதழ் வெளியிடும் செலவு ரூ.12 என உயர்ந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மின்அலை சந்தா 01.01.2016 முதல் ரூ.100லிருந்து ரூ.150ஆக உயர்த்திட இப்பொதுக்குழு தீர்மானிக்கிறது.

- சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைந்திட பொறுப்பாளர்களுக்கு (செயலாளர், பொருளாளர், கோட்டச் செயலாளர்களுக்கு) பயிற்சி அளித்திடவும், தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு மண்டல அளவில் பயிற்சி அளித்திடவும் பொதுக்குழு அனுமதி அளிக்கிறது.

- சென்னை இராயப்பேட்டையிலுள்ள சங்க அலுவலக பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதிதாக கட்டிடம் உருவாக்கிட அனுமதிப்பதுடன் அதற்காக கிளைகளிலிருந்து அனுப்பப்படவேண்டிய ஊதிய உயர்வு நன்கொடை தொகை (75% of Target) நிலுவைகளை வருகின்ற 01.10.2015க்குள் மைய அமைப்புக்கு அனுப்பிட இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது. ரூ.10,000/–க்கு மேல் நன்கொடை அளிக்கும் நபர்களின் பெயர்களை சங்க அலுவலக கட்டிடத்தில் பெயர் பலகையில் பொறித்திடவும் பொதுக்குழு அனுமதி அளிக்கிறது.

மேலும் பல தீர்மானங்கள் இயற்றப்பட்டன (தீர்மானங்கள் தனியாக).

மாநிலப் பொதுக்குழுவிற்கான நடவடிக்கைகள் வேலூா் மண்டலத்தின் சார்பில் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன. வேலூா் மண்டலக் கிளைகளின் சார்பில் தன்னார்வ தொண்டர்கள் இரண்டுநாள் பொதுக்குழு பணிகளில் ஈடுபட்டு சிறப்பாக பணியாற்றியதற்காக மாநிலத் தலைவர் அவர்களால் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். குறிப்பாக பணி ஓய்வு பெற்ற பிறகும் இரண்டு நாட்கள் தொடர்ந்து பொதுக்குழுவில் அயராது பணியாற்றிய முன்னாள் வேலூா் மண்டலச் செயலாளர் பொா்.V.லட்சுமிநரசிம்மன், வேலூா் மண்டலச் செயலாளர், வேலூர் மண்டல கிளைச் செயலாளர்கள் மற்றும் கிளைப் பொறுப்பாளர்களின் பணி பாராட்டுக்குரியது.

பொதுக்குழு கூட்டத்தின் இருநாட்களிலும் மூத்த பொறியாளர்கள் பொதுக்குழு நிகழ்வுகளை கவனித்து சங்கம் மேலும் சிறப்புடன் பணியாற்ற ஆலோசனைகளையும்,

அடுத்துவரும் பொன்விழா ஆண்டில் மேலும் பல சாதனைகள் படைத்திடவும் வாழ்த்துக்களை வழங்கினார்கள்.

நாட்டுப்பண் இசைக்க பொதுக்குழு இனிதே நிறைவு பெற்றது.

**<u>JE II to JE I பதவி உயர்வு வழக்குகள்:</u>**

22.06.2015 அன்று இளநிலைப் பொறியாளர் இரண்டாம் நிலை, முதல் நிலை பதவி உயர்வு வழக்குகள் சென்னை உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்ச் முன்பாக விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் உடன்பாடு (MOU) ஏற்படுத்திட சிலர் இசைவு தெரிவித்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி அவர்கள் இதில் உடன்படாதவர்கள் யார் யார் என்ற போது பொறியாளர் சங்கம் உள்ளிட்ட மூன்று வழக்கறிஞர்கள் இதற்கு உடன்படவில்லை என தெரிவித்தனர். நமது வழக்கறிஞரின் கோரிக்கையை ஏற்று விசாரணை மதியம் 02.15க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

02.15க்கு மீண்டும் வழக்கு துவங்கிய போது, நமது மூத்த வழக்கறிஞர் வழக்கு தொடர்பான கருத்துக்களை எடுத்துரைத்தார். இவ்வழக்கில் சட்ட ரீதியாக அனுகவேண்டிய, தீர்க்கப்படவேண்டிய பல கருத்துக்கள் நீதிமன்றத்தில் வாதிடப்பட்டு, எதிர்கால பட்டயப் பொறியாளர்களின் முன்னுரிமை உள்ளிட்ட பாதுகாப்பை நீதிமன்ற விசாரணைக்கு பின்னர் வருகின்ற தீர்ப்பினால் மட்டுமே உறுதி செய்ய முடியும், உடன்படிக்கையால் அல்ல என்பதை நீதிபதிகள் முன் வைத்தார்.

நமது தரப்பு வாதத்தை கேட்ட பின்னர், நீதிபதிகள் வழக்கு விசாரணையின் (Adjudication) அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். அதனைத்தொடர்ந்து நமது மூத்த வழக்கறிஞர் – வாரியப்பணிநிலை, BP 33, BP 17 ஆகியவற்றின் நிலை, Diploma மற்றும் Non diploma cadre ஆகியவற்றின் நிலை, அவற்றின் முன்னுரிமை, பதவி உயர்வு முறை ஆகியவற்றை எடுத்துரைத்தார்கள். Categories of Diploma Engineers (TAs) and Non Diploma holders (LI / CI) are two different water tight compartments. Crossing from one zone to other zone to find the shortest queue for promotion is not possible என்பதையும், TNEB (Management) has got powers to fix the feeder categories based on the Educational Qualification என்பதற்கான உச்சநீதிமன்ற தீர்ப்பை மேற்கோள் காட்டி நமது தரப்பு நியாயத்தை வலியுறுத்தினார்கள். Non Diploma holders Diploma படித்தால் TA (Internal Selection) ஆக வந்து பின்னர் தான் JE II Grade ஆக வரமுடியும் என்று நமது நிலையை எடுத்துரைத்தார்கள்.

வாரியத்தின் சார்பில் AAG மற்றும் வாரிய வழக்கறிஞர் ஆகியோர் ஆஜராகி இந்த வழக்கில் உள்ள இடர்பாடு, பதவி உயர்வு முன்னுரிமையில் எழுகின்ற முரண்பாடு ஆகியவற்றை எடுத்துரைத்து பட்டயம், பட்டயமல்லாதவர்களின் பதவி உயர்வுக்கான "Hierarchy chart" கொடுத்து BP 17ஐ தொடர்ந்திட நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்ற வாரிய நிலையை எடுத்துரைத்தார்கள்.

பட்டயப் பொறியாளர்களுக்கு (TA-களுக்கு) வாதிடுவதாக வழக்கில் இணைந்த ஒரு சிலர் உடன்படிக்கையை வலியுறுத்துவதாகவும், 100 நபர்கள் மட்டுமே LI / CIல் இருப்பதாகவும், அவர்களுக்கும் Diploma quota-வில் பதவி உயர்வு வழங்கவேண்டும் எனவும், LI / CI-ல்

டிப்ளமா படித்தவர்களும், TA-ம் ஒரே channel-ல் JE II Gr. ஆக வேண்டும் என்று வாதிட்டனர். இதனால் சங்கத்தின் உறுப்பினர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் நீதிபதிகளிடம் தெரிவித்தனர்.

மாண்புமிகு நீதிபதிகள் சங்கத்திடம் இதனால் எத்தனை நபர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று கேட்டதற்கு நமது மூத்த வழக்கறிஞர் அனைத்து தொழில்நுட்ப உதவியாளர்களும் (தற்போது பதவி உயர்வுக்காக பட்டியலில் உள்ளோர் உட்பட) பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்கள்.

மேலும், நமது மூத்த வழக்கறிஞர் LI / CI-ம் TA-ம் ஒன்றல்ல என்றும் இருவருக்கும் இடையேயான வித்தியாசங்களை எடுத்துரைத்து Non-Diploma Holders Diploma படித்தால் TA-வாகத்தான் வரமுடியும், Junior Engineer II Grade ஆக வரமுடியாது, பட்டயப் பொறியாளர்களின் பணி நிலையில் (முதல் நிலை – TA, இரண்டாம் நிலை – JE II Grade) இரண்டாவது நிலையிலான JE II Grade பதவியை கேட்கிறார்கள் வாரிய விதிகளின்படி அப்படி வழங்க முடியாது என்பதை எடுத்துரைத்தார்.

வாரியத்தரப்பில் AAG அவர்களும் நமது நிலையை வலியுறுத்தி LI / CI நபர்கள் TA-களுக்கு பதிலாக நேரடியாக இரண்டாம் நிலையில் JE II Grade பதவிகளை கேட்கிறார்கள் வாரிய விதிப்படி அவ்வாறு வழங்க இயலாது என்று தெரிவித்தார்கள்.

சங்கத்தின் வாதம் உடன்படிக்கையின்படி பதவி உயர்வு பெறும் LI / CI 100 நபர்களா? என்ற எண்ணிக்கை அல்ல, இந்த தீர்ப்பை தொடர்ந்து மீண்டும் இதுபோன்றே எதிர்காலத்தில் எழும் வழக்குகளை இந்த உடன்பாட்டின் மூலம் தீர்க்க முடியாது. மேலும் தனி நீதிபதி அவர்களது தீர்ப்பினால் ரத்து செய்யப்பட்ட வாரிய ஆணை 17 (BP 17 நாள் 05.07.2003) உடன்படிக்கை மூலம் சட்டப்படி நிலை நிறுத்திட முடியாது. தனி நீதிபதி அவர்களின் தீர்ப்பை உடன்படிக்கையால் ரத்து செய்ய முடியாது என்று எடுத்துரைத்தார்கள்.

உடன்படிக்கையில் தெரிவித்துள்ளபடி, வாரிய ஆணை 17 (BP 17 நாள் 05.07.2003) உடன்படிக்கை ஏற்படுத்தப்படும் நாளில் (அதாவது 22.6.2015) செயல்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளதை சங்கத்தால் ஏற்க முடியாது, ஏனெனில் 5.7.2003 முதல் 22.06.2015 வரையிலான 12 ஆண்டுகளுக்கான பதவி உயர்வுகள், முன்னுரிமை, இதனைத் தொடர்ந்த வழக்குகள் என பிரச்சனை மிகப் பெரிதானதாகும். இது தொழில்நுட்ப உதவியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் ஆகியோரது எதிர்காலத்தை வெகுவாக பாதிக்கும் எனவே வாரிய ஆணை 17ஐ உத்தரவு வெளியிட்ட 05.07.2003 அன்றிலிருந்தே அமல் செய்திட வேண்டும். இதுவே பட்டயப் பொறியாளர்களுக்கு பணிப்பாதுகாப்பை ஏற்படுத்தும் என்று வாதிட்டார்.

"By this settlement promotion can be given. Whereas, your (Sangam) vision is for the future and the implementation of the orders" என்று நமது மூத்த வழக்கறிஞரின் கருத்தின்மீது நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். வாதங்களுக்கு பின்னர் நீதிபதிகள் தீர்ப்பின் சாரத்தை நான்கு பகுதிகளாக அளித்தனர்.

<u>நீதிமன்ற உத்தரவின் சாராம்சம்:</u>

1. வாரிய ஆணை 17 (BP 17 நாள் 5.7.2003) பட்டயம், பட்டயமல்லாதோருக்கான பதவி உயர்வுக்காக உருவாக்கப்பட்டது. இவ்வாரிய ஆணை சட்டப்படி சரியாக உள்ளது. (Perfectly valid in law …. we uphold BP 17 Dt.5.7.2003).

2. வாரிய ஆணை 17ன் (BP 17 நாள் 5.7.2003) குறைபாடு அதன் செயலாக்கம் 4.4.87 முதல் என்று தெரிவிக்கப்பட்டது. பணி விதிகளில் திருத்தம் 5.7.2003 அன்று வழங்கப்பட்டதால் வாரிய ஆணை 17 (BP 17 நாள் 5.7.2003) வெளியிடப்பட்ட 5.7.2003 முதல் அமலுக்கு வரும்.

3. 2002 முதல் வழக்கு நிலுவையில் இருப்பதாலும், வாரிய ஆணையை 5.7.2003 முதல் அமல்படுத்திட ஒப்புக்கொண்டதாலும் ஏற்கனவே வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் அனுமதிக்கப்படும்.

4. 5.7.2003க்கு பின்னர், நீதிமன்ற தீர்ப்பின் மூலம் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள், similarly placed person-களுக்கு வாரிய ஆணைப்படி பதவி உயர்வு வழங்க முடியாது என்பதால் வாரிய அதிகாரத்தை பயன்படுத்தி வாரியப்பணி விதிகளில் உரிய திருத்தம் செய்து வழங்கிட வேண்டும் (Promotion pending to till date can also be considered by suitably amending the service regulation (as a special case). Future promotion not possible).

**மேற்கூறிய கருத்துக்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டபோது நாம் புரிந்து கொண்டவை, முன் தகவலுக்காக மட்டுமே உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. நீதிமன்றத் தீர்ப்பின் நகல் பெற்ற பின்னர் முழுமையான தகவல்கள் அளிக்கப்படும்.**

சுருங்கச் சொன்னால்;

- JE II Gr. பதவி உயர்வில் – Diploma (3) : Non Diploma (1) என்ற வாரிய நிலையை கடைபிடிப்பதில், Diploma quota – reserved for TA என்பதும், LI / CI போன்ற பதவிகளில் உள்ளவர்கள் பட்டயம் படித்தால் TA (IS) ஆக மட்டுமே வரமுடியும் என்பதையும்,

- வாரிய ஆணை 17 (BP 17 நாள் 5.7.2003) பிறப்பிக்கப்பட்ட நாள் 05.07.2003 முதலே தொடர்ந்து அமலில் இருக்கும் என்பதையும்,

- வாரிய ஆணை 17 (BP 17 நாள் 5.7.2003) சட்டப்படி சரியானதுதான் என்பதை நீதிமன்ற தீர்ப்பின் மூலம் உறுதி செய்து தற்போதுள்ள தொழில்நுட்ப உதவியாளர்கள் மட்டுமின்றி எதிர்காலத்திலும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவி உயர்வு மற்றும் முன்னுரிமையை உறுதி செய்தது சங்கம் மட்டுமே,

- 22.06.2015ல் நீதிமன்றத்தில் பட்டயப் பொறியாளர்களின் (தொழில்நுட்ப உதவியாளர்களின்) சட்ட பூர்வமான நிலையை, வாரிய நடைமுறையை, வாரிய உத்தரவுகளை எடுத்துரைத்து வாதிட்டது பொறியாளர் சங்கம் மட்டுமே.

- தொழில்நுட்ப உதவியாளர்களும் டிப்ளமா படித்த LI / CI-களும் ஒன்றே, ஒரே cadre-ல் JE II Grade பதவி உயர்வுகள் வழங்கிட வேண்டும் என்று தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் ஒரு அமைப்பு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதை மறுத்து தொழில்நுட்ப உதவியாளர்களின் தனித்தன்மையை நிலைநிறுத்தியது சங்கம் மட்டுமே.

- தொழில்நுட்ப உதவியாளர் அல்லாதவர்கள் குறைந்த எண்ணிக்கையில் (100) தான் உள்ளனர் அவர்களுக்கும் தொழில்நுட்ப உதவியாளர்களோடு பதவி உயர்வு வழங்கிடவேண்டும் என்று, வாரிய நிலைப்பாட்டிற்கு முரணாக, தொழில்நுட்ப உதவியாளர்கள் சார்பாக வழக்கில் இணைந்த ஒரு அமைப்பு வாதிட்டதையும், தொழில்நுட்ப உதவியாளர்களின் நியாயமான உரிமைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுத்தவர்களின் வாதங்களையும் சட்ட ரீதியாக எதிர்கொண்டு தொழில்நுட்ப உதவியாளர்களின் உரிமையை நிலைநாட்டியதும் சங்கம் மட்டுமே.

- 05.07.2003 முதல் 22.06.2015 வரை வாரிய ஆணை 17 (BP 17 நாள் 5.7.2003) செயல்பாட்டில் இல்லையென்றாலும் தொழில்நுட்ப உதவியாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று தவறான கருத்தை நீதிமன்றத்தில் தெரிவித்து தொழில்நுட்ப உதவியாளர்களின் முன்னுரிமைகளை பாதிக்கச்செய்யும் நிலையை எதிர்த்து வாதாடி வாரிய ஆணை 17ஐ ஆணை பிறப்பித்த நாளான 05.07.2003 முதலே நடைமுறைப்படுத்திட உத்தரவு பெற்றது சங்கம் மட்டுமே.

- தற்போதுள்ள பதவி உயர்வுகளை கடந்து, எதிர்கால பட்டயப் பொறியாளர்களின் நலனையும் சங்கம் கருத்தில் கொண்டு வாதிடுகிறது என்று நீதிமன்றம் கருத்து தெரிவித்தது, பொறியாளர் சங்கத்தின் கடமையை, பட்டயப்பொறியாளர்களின் மீதான அக்கறையை வெளிப்படுத்தியுள்ளது.

தீர்ப்புக்கு பின்னர் AAG அவர்களும் வாரிய வழக்கறிஞரும் நிலுவையிலுள்ள பதவி உயர்வுகளை வழங்கிட அனுமதி கேட்டுக்கொண்டனர்.

வாரிய ஆணை 17ஐ 05.07.2003 முதல் நடைமுறைப்படுத்தி தொழில்நுட்ப உதவியாளர்கள் பதவி உயர்வு மற்றும் முன்னுரிமையை உறுதி செய்திட முயற்சிகள் மேற்கொண்டு வாரிய ஆணை 17ஐ நிலை நிறுத்திய மதிப்பிற்குரிய வாரியத்தலைவர்கள், வாரிய அதிகாரிகள், மதிப்பிற்குரிய AAG மற்றும் வாரிய வழக்கறிஞர்களுக்கும், தொழில்நுட்ப உதவியாளர்களின் உரிமைகளை சட்ட ரீதியாக வலிமையான வாதங்கள் மூலம் எடுத்துரைத்து இவ்வழக்கில் வெற்றிக்கு வித்திட்ட சங்கத்தின் மூத்த வழக்கறிஞர் உள்ளிட்ட வழக்கறிஞர் குழுமத்திற்கும் சங்கத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்களது பதவி உயர்வுகள் தாமதப்படுத்தப்படுவதை வருத்தத்துடன் வெளிப்படுத்தினாலும், இதிலுள்ள பிரச்சனைகளை உணர்ந்து தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்போது பணியில் உள்ளவர்களும் இனி வரும் சந்ததியினரும் பதவி உயர்வு, முன்னுரிமை போன்றவற்றை தக்க வைத்திட பொறியாளர் சங்கத்துடன் இணைந்து செயல்பட்டு ஒத்துழைப்பு நல்கி பொறுமை காத்த பதவி உயர்வு பட்டியலில் உள்ள தொழில்நுட்ப உதவியாளர்களுக்கும் அவர்களை தொடர்ந்து பணியமர்வு பெற்ற தொழில்நுட்ப உதவியாளர்கள் அனைவருக்கும் பொறியாளர் சங்கம் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

**வாழ்க பொறியாளர் சங்கம்.**

அன்புடன்,
**( வி. அசோக்குமார் )**
பொதுச் செயலாளர்.